**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை எண் 11 / 2017** 17-07-2017

அன்புடையீர்,

வணக்கம். 29.5.2017 அன்று வாரியத்துடன் நடைபெற்ற ஊதிய உயர்வு 3-வது கட்டப்பேச்சுவார்த்தையின் போது, ஊதிய உயர்வுடன் இதர முக்கியத் தொழிலாளர் பிரச்சனைகள் குறித்தும் பேசினோம்.

அதில் ஒன்றாக "கணக்கு உதவியாளரிலிருந்து கணக்கு மேலாளர் பதவி உயர்வுப்பட்டியல் 24.6.2016-ல் காலாவதியாகிறது என்றும் 20.3.2017 குறும தேதியாகக் கொண்டு புதிய பதவி உயர்வுப்பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம்." (சுற்றறிக்கை எண்.7, நாள். 29.5.2017)

மீண்டும் வாரியத்துடன் பேசும் வாய்ப்பு கிடைத்தபோது "கணக்கு உதவியாளரிலிருந்து, கணக்கு மேலாளர் பதவி உயர்வு 20.3.2015 குறும தேதி அடிப்படையில் 40 பேருக்கு 24.6.2016-ல் பேனல் தயாரிக்கப்பட்டது. 20.3.2016 குறும தேதி கடந்த பிறகும், 20.3.2015 தேதி அடிப்படையில் பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டதை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு சிலரால் தடை உத்திரவு பெறப் பட்டுள்ளது. இந்நிலையில் 24.6.2017-ல் பேனல் ஓராண்டு முடிந்து காலாவதியாவதால், 20.3.2017 குறும தேதி அடிப்படையில் தகுதிகாண் அறிக்கை கேட்டுப் பெற்று, புதிய பேனல் தயாரிக்க வேண்டும் என்று நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்துள்ளோம்".(சுற்றறிக்கைஎண்.8, நாள்.15.6.2017) என்பதைத் தெரிவித்திருந்தோம்.

மேற்கண்ட நமது வேண்டுகோளினை ஏற்று, நிர்வாகம் கணக்கு மேலாளர் பதவி உயர்வு வழங்கிட, 20.03.2017 குறும தேதியில், பட்டியலில் உள்ள 745 பேரில் தகுதி காண் அறிக்கையை 12.07.2017-ம் நாளில் கேட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

❖ அதேபோல் மின்வாரியத் தொழிலாளர்களின் விருப்ப ஊர் மாறுதலுக்கு வாரியம் ஒரு அபத்தமான வழிகாட்டுமுறைகளை 28.6.2017-ல் வெளியிட்டு, அதனை உடனடியாக, அதாவது 1.7.2017 - 15.7.2017 விருப்ப மாறுதல் காலத்திற்கே அமுலுக்கு வரும் என தெரிவித்தது.

நமது சங்கம் இதனை ஆட்சேபித்து, 10.7.2017 கடிதம் ஒன்றைக் கொடுத்து நிர்வாகத்துடன் பேசினோம்.

1) புதிய வழிகாட்டு முறைகளை 1.1.2018 முதல் அமுல் படுத்திடுமாறும், 2) அதுவரை தற்போதைய விதிகளைப் பின்பற்றுமாறும் 3) எக்காரணம் கொண்டும் பழைய விதிமுறைப் படிவங்களில் கேட்டவர்களுக்கு விருப்ப மாறுதல் மறுக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டோம்.(நமது சுற்றறிக்கை எண்.10,-ல் கடிதம் 10.7.2017.)

❖ நமது வேண்டுகோள் ஏற்கப்பட்டு, நாம் கேட்டபடியே நிர்வாகம் 14.7.2017-ல் உத்திரவு பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். (இணைப்பு) புதிய வழிகாட்டு முறைகளை செம்மைப்படுத்திட மேலும் சில கருத்துக்களைத் தெரிவித்து 15.7.2017-ல் கடிதம் கொடுத்துள்ளோம்.

❖ பகுதி நேரத் தொழிலாளர்கள் பிரச்சனை,
ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சனை,
SNLI சம்பள நிர்ணயம்,
F.M I to J.E.II Gr, Spl.Gr.F.M. to J.E. II ஊதிய வேறுபாடு,

விருப்ப மாறுதல் வழிகாட்டு முறைகள் முதலிய பிரச்சனைகள் பற்றி நிர்வாகத்துடன் விரிவாகப் பேசிட நேரம் ஒதுக்கித்தருமாறு கேட்டுள்ளோம்.

❖ நமது சங்கத்தின் அடுத்த மாநிலப் பொதுக்குழுவினை கடலூரில் எதிர் வரும் நவம்பர்/ டிசம்பர் திங்களில் நடத்திட திரு.P.அன்பழகன், இணைச்செயலாளர் மத்திய சங்கத்தின் சௌகரியத்தைக் கேட்டுள்ளார்.

❖ மூத்த பொறுப்பாளர்களைக்கொண்ட சங்கத்துணைக்குழுவால், ஒருமித்து தயாரிக்கப்பட்டு, மாநிலச்செயற்குழுவால் ஏகமனதாக ஏற்றுப் பரிந்துரைக்கப்பட்ட துணைவிதித் திருத்தங்களுக்கு இப்பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்படவுள்ளது. திருத்தங்களுக்கு பொதுக்குழுவில் ஒப்புதல் பெற்ற பிறகே, அடுத்த ஆண்டு, சங்கத்தின் கிளை முதல் மத்திய சங்கம்வரை பொறுப்பாளர்களுக்கான தேர்தல் விதிமுறைகள் செயற்குழுவில் தீர்மானிக்கவும், புதிய பொறுப்பாளர்கள் தேர்தலும் நடத்திட முடியும்.

ஏற்கனவே சுற்றறிக்கை எண்.10, நாள்.10.07.2017-ல் கேட்டுக்கொண்டபடி, கிளைப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் துணைவிதி திருத்தங்கள் மீதான கருத்துக்களை விவாதித்து, தீர்மானம் வாயிலாக மத்திய சங்கத்திற்கு 30.09.2017-க்குள் தெரிவித்திட வேண்டுகிறோம்.

❖ 2017-ம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாத் தொகையினை வசூலித்து உடனடியாக மத்திய சங்கத்திற்கு செலுத்திடுமாறு வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

இணைப்பு : 3

பெறுநர். கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள் மற்றும் மத்தியசங்கப் பொறுப்பாளர்கள்.

நகல். செய்திமடல்

---

TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION
(Administrative Branch)

144, Anna Salai,
Chennai - 600 002.

Memo.No.104992/1176/G43/G431/2017-2, dated14.07.2017.

Sub : Establishment –Request Transfer Guidelines Instructions issued - Reg.

Ref : (Rt.) CMD/TANGEDCO Proceedings No.5, (Administrative Branch) dated 28.06.2017.

-------

Regarding Request transfer, the following directions are issued as per the instruction of the Chairman cum Managing Director/TANGEDCO.

1. New transfer guidelines issued vide reference cited comes into effect from 01.01.2018 only.
2. Till then the present (old existing) transfer guidelines shall be followed.
3. Applications may be submitted in the old format. If applied in the new format that also will be accepted.
4. The time limit for submission of RTA is extended upto 25.07.2017.

A.V. RAVI
CHIEF ENGININEER/PERSONNEL

பெறுநர். 17.07.2017
தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்,
சென்னை – 2

ஐயா,

பொருள் : தொழிற்சங்க உறவு – தொழிலாளர் பிரச்சனை குறித்து – காலமுறை பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திட வேண்டுவது.

பார்வை : Chairman Circular Memo.11468/Adm.Br./IR-2(1)/84-5, dated 31.03.84

வாரியத்தில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுடன், காலமுறை பேச்சு வார்த்தை நடத்துவதற்கான வழிகாட்டு முறைகளுக்கு, தெளிவான வாரிய உத்திரவு வழங்கப்பட்டிருந்தும், அண்மைக் காலமாக அவை செயல்படுத்தாமல் இருப்பது குறித்து வருந்துகிறோம்.

தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகம், தொழிலாளர் பிரச்சனை குறித்து மனம் திறந்து பேசிடவும், வாரிய நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கிடையே ஆரோக்கியமான தொழிலுறவு நிலவுவதற்கும், ஆர்பாட்டம், காத்திருப்பு, முற்றுகை முதலிய பல்வேறு போராட்டங்களால் தொழிலமைதி, வாரியத்தின் நற்பெயர் கெடாமல் இருப்பதற்கும், இத்தகைய இருதரப்பு பேச்சு வார்த்தைகள் உதவியாக இருக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

மேற்கண்டவைகளின் பின்னணியில் தொழிலாளர்களின் சில பிரச்சனைகளை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

1. SNLI பதவி உயர்வு சம்மந்தமாக வாரிய உத்திரவு எண்2,(Adm.Br.) நாள் 01.02.2017- சரியாகப் பொருள் கொள்ளுதல்

2. F.M. I Gr. to JE II Gr பதவி உயர்வு பெற்றுள்ள சீனியர்களுக்கும் Spl.Gr.F.M. tp JE II Gr பதவி உயர்வு பெறும் ஜூனியர்களுக்கும் உள்ள தர ஊதிய வேறுபாடுகளை களைதல்

3. பகுதி நேர மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பிரச்சனைக்கு சுமூகத்தீர்வு காண முயற்சித்தல்

4. புதிய விருப்ப ஊர் மாறுதல் வழிகாட்டு முறைகளை தெளிவாக்கிடுதல்
மேற்கண்ட முக்கியமான, தொழிலாளர்களை மிகவும் பாதிக்கக்கூடிய, பிரச்சனைகள் மீது எங்கள் சங்கத்தின் கருத்துக்களை தெரிவிப்பதற்கும், நிர்வாகத்தின் பதிலை அறிந்து கொள்வதற்கும், ஏதுவாக நிர்வாகத்திற்கு வசதிபடும் நாளினையும், நேரத்தையும் விரைவில் ஒதுக்கித் தருமாறு வேண்டுகிறோம்.

தங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி.

தங்கள் உண்மையுள்ள,

பொதுச்செயலாளர்

பெறுநர். 15.07.2017

தலைமைப்பொறியாளர் / பணியமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்,
சென்னை – 2

ஐயா,

பொருள் : நிர்வாகம் - டான்ஜெட்கோ -- பணியாளர்களின் விருப்ப மாறுதல் - வழிகாட்டுமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது தொடர்பாக.

பார்வை :

1) (Rt).CMD/TANGEDCO Proceedings No.5, Dated . 28.06.2017
2) எங்களது சங்கத்தின் 10.7.2017 தேதியிட்ட கடிதம்.
3) Memo.No.104992/1176/G43/G431/2017-2, dated14.07.2017.

--------------

புதிய விருப்பமாறுதல் வழிகாட்டு முறைகள் தொடர்பாக எங்களது சங்கத்தின் 10.7.2017 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி

1) புதிய வழிகாட்டு முறைகள் 1.1.2018 முதல் அமுல் படுத்திடவும்,
2) அதுவரை தற்போதைய வழிகாட்டுமுறைகளை தொடர்ந்து பின்பற்றிடவும்,
3) பழைய விருப்ப மாறுதல் விண்ணப்பப் படிவங்களை அனுமதிப்பதற்கும்,
4) விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் சமர்ப்பித்திட 25.7.2017 வரை கால நீட்டிப்பிற்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் புதிய வழிகாட்டு முறைகள் சம்மந்தமாக எங்களது சங்கத்தின் 10.7.2017 கடிதத்தினை தொடர்ந்து கீழ்காணும் சில கூடுதல் கருத்துக்களை தெரிவித்திட விரும்புகிறோம்.

பத்தி 5a இருக்கும் காலியிடம் / உருவாகும் காலியிடம் ஆகியவற்றிற்குத் தான் விருப்ப மாறுதல் ஏற்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. காலியிடம் இருந்தால்தான் விருப்ப மாறுதல் வழங்கமுடியும்.

உருவாகும் காலியிடம் என்ற வாசகம் சரியல்ல. உருவாகும் காலியிடம் என்பதற்கு காலவரை எதுவும் கிடையாது. எனவே "உருவாகும் காலியிடம்" என்ற வாசகம் சரியல்ல.

பத்தி 9 ஓராண்டு பணிக்காலம் முடிந்தால்தான் விருப்ப மாறுதல் கேட்க முடியும். எதற்காக இந்த விதி? என்று உத்திரவில் விளக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. இல்லையெனில் உத்திரவில் கூறப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு விதிக்கும் அதற்கான அவசியத்தை விளக்கியிருக்க வேண்டும்.

பத்தி 9 (i)இனிமேல் மாறப் போகிறவர்களுக்கும் (are to be transferred) என்ற வாசகம் சரியா என்பதை பரிசீலிக்க வேண்டுகிறோம். ஏனெனில் விருப்ப மாறுதல் விண்ணப்பம் கொடுப்பது / வழங்குவது எல்லாம் அன்றைய தேதியில், அந்த இடத்தில் பணிபுரிபவர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

மேற்கண்ட ஷரத்துக்கள் ஏற்கனவே இருக்கும் CE/PersonnelMemo.No. 69140/IR.1(3)/96 -1 Adm.Br.dated 11.6.1996 -ல் உள்ளவைதான் என்பதை நாங்கள் மறுக்கவில்லை.

எனினும் தேவையில்லாதவற்றை, நடைமுறைக்கு ஒத்துவராததை, புதிய வழிகாட்டு முறைகளிலும் கொண்டு வருவது அவசியமில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆவண செய்திட வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
இர.சந்திரசேகரன்.
ஒம்.-------------------
பொதுச்செயலாளர்